## சுருக்கம்

வேளாண்மை – திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தினை கடைபிடித்து மாநிலத்திலேயே அதிக உற்பத்தி திறன் பெறும் விவசாயிக்கு வழங்கப்படும் மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்பு விருது திட்டத்தில், பயிர் விளைச்சல் போட்டிக்கான அறுவடை நாள் கடைசித் தேதியினை ஏப்ரல் 15ம் தேதிவரை நீட்டித்தும், தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளிப் பதக்கம் தயார் செய்திட ஒதுக்கப்பட்டு வரும் நிதி ரூ.3,500/–க்கு பதிலாக, ரூ.5,000/– ஆக உயர்த்தியும் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை (வே.உ.4) துறை**

திருவள்ளுவர் ஆண்டு 2049, புரட்டாசி–1

அரசாணை (நிலை) எண்.233 நாள்: 17.09.2018

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.246, வேளாண்மை (வேஉ4) துறை, நாள் 21.12.2011.
2. வேளாண்மை இயக்குநரின் கடித எண்.நெ & சி3/42640/2018, நாள் 3.5.2018 மற்றும் 21.5.2018.

*******

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் நெல் சாகுபடியில், திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தினை கடைபிடித்து மாநிலத்திலேயே அதிக உற்பத்தி திறன் பெறும் விவசாயிக்கு ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினத்தன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரூ.5.00 இலட்சம் சிறப்பு பரிசு (Special Award) மற்றும் ரூ.3,500/– மதிப்புடைய பதக்கம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், அவ்வாணையில் பின்வரும் வழிமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது:–

1) குறைந்தபட்சம் 50 சென்ட் நிலம் அறுவடை செய்யப்பட வேண்டும்,
2) நில உரிமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர்களும் கலந்து கொள்ள தகுதியுடையவர்கள்,
3) இப்போட்டியில் பங்குபெற விரும்பும் விவசாயிகள் ரூ.150/– பதிவுக்கட்டணமாக செலுத்த வேண்டும்,
4) சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர இதர மாவட்டங்களில் உள்ள அனைத்து விவசாயிகளும் கலந்துகொள்ள தகுதியுடையவர்கள்,
5) குறைந்தபட்ச நெல் மகசூல் 2500 கிலோ/ஏக்கர் இருக்க வேண்டும்.
6) போட்டியில் கலந்து கொள்பவர்கள் இணைப்பில் உள்ள படிவத்தினை பூர்த்தி செய்து பதிவுக்கட்டணத்துடன் சம்மந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குநரிடம் சமர்ப்பிக்க வேண்டும்,
7) பதிவு கட்டணத்திற்கான ரசீது விவசாயிகளுக்கு கொடுக்கப்பட வேண்டும்,
8) மாநில அளவு போட்டிக்கான கடைசி தேதி அந்த நிதியாண்டில் 31, மார்ச்,
9) போட்டியில் கலந்து கொள்பவர் அறுவடை செய்யும் தேதியை 15 நாட்களுக்கு முன்பு சம்பந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குநர்களுக்கு நேரிலோ அல்லது பதிவு தபாலிலோ அனுப்பி அதற்கான ஒப்புதலைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் விவசாயிகள் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது,

[த.பி.பா]

10) பதிவுக்கட்டணம் எந்த சூழ்நிலையிலும் திருப்பி தரப்படமாட்டாது,
11) மாவட்ட வேளாண் இணை இயக்குநர்கள் அறுவடை செய்யும் தேதி முடிவு செய்து அதனை வேளாண்மை ஆணையர் அல்லது அவரது பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் வகையில் முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும்.
12) நடப்பு ஆண்டில் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு விருது அடுத்து வரும் ஆண்டில் குடியரசு தின விழாவில் வழங்கப்படும்.
13) மாநில அளவில் பயிர் விளைச்சல் போட்டிக்கு தேர்வு செய்யப்பட்ட குழுவே சிறப்பு விருதுக்கான விவசாயியை தேர்வு செய்வதற்கும் பயன்படுத்தலாம்,
14) சிறப்பு விருதுக்கான விவசாயியை தேர்வு செய்யும் குழுவில் உள்ள உறுப்பினர்கள்:–

    i. வேளாண்மை ஆணையர் அல்லது அவரது பிரதிநிதி.
    ii. மாவட்ட ஆட்சியர் அல்லது அவரது பிரதிநிதி.
    iii. வேளாண்மை இணை இயக்குநர் அல்லது அவரது பிரதிநிதி.
    iv. தேர்வு செய்யப்பட்ட மூன்று முன்னோடி விவசாயிகளில் ஒருவர் (வேளாண்மை ஆணையரால் நியமனம் செய்யப்பட வேண்டும்).

15) குறைந்த அளவு மூன்று குழு உறுப்பினர்கள் அறுவடையில் கலந்து கொள்ள வேண்டும்,
16) போட்டிக்கு தேர்வு செய்யப்பட்ட நிலம் சம்மந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குநர் அவர்களால் மேற்பார்வையிடப்பட வேண்டும். அந்த நிலத்தில் மகசூல் பரிந்துரைக்கப்பட்ட மகசூலான 2500 கிலோ/ஏக்கருக்கு குறைவாக இருந்தால், அந்த நிலம், சம்மந்தப்பட்ட விவசாயிக்கு காரணத்தை தெரிவித்து, தள்ளுபடி செய்யப்பட வேண்டும்,
17) சிறப்பு விருந்துக்கு தேர்வு செய்யப்பட்ட விவசாயி வேளாண்மை ஆணையரால் அறிவிக்கப்பட வேண்டும்,
18) நெல்லில் பயிர் விளைச்சல் போட்டிக்கு பதிவு செய்யப்பட்ட விவசாயி சிறப்பு விருதுக்கு பதிவு செய்ய இயலாது. இந்த நிபந்தனையில் எந்த வேறுபாடு காணப்பட்டாலும் அந்த விவசாயி அந்த வருடத்திற்கான பயிர் விளைச்சல் போட்டி மற்றும் சிறப்பு விருந்துக்கான போட்டியில் கலந்து கொள்ள தகுதியற்றவர் ஆவார்.
19) வேளாண்மை ஆணையரால் நியமிக்கப்பட்ட முன்னோடி விவசாயி சிறப்பு விருதுக்கான அறுவடையில் கலந்து கொள்வதற்கான பயணம் மேற்கொள்வதற்கு முதல் தர குழுவாக கருதப்படுவார்.

2. மேற்கூறிய வழிமுறைகளின்படி, 2011–12 முதல் 2016–17 வரை நெல் சாகுபடியில் திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தினை கடைபிடித்து மாநில அளவில் அதிக மகசூல் எடுத்து முதலிடம் பெற்ற விவசாயிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் குடியரசு தினவிழாவில் ரூ.5.00 இலட்சம் பரிசும் மற்றும் ரூ.3500/– மதிப்புள்ள வெள்ளியிலான தங்கமுலாம் பூசப்பட்ட வட்ட வடிவிலான பதக்கமும் வழங்கப்பட்டுள்ளது.

3. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், வேளாண்மை இயக்குநர் 2016–17ஆம் ஆண்டில் தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளிப்பதக்கம் தயார் செய்திட ஒதுக்கப்பட்ட நிதி ரூ.3500/– குறைவாக இருப்பதால் பதக்கத்தின் அளவு சிறியதாக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும், தற்போதைய வெள்ளியின் விலை ஏற்றத்தினை கருத்தில் கொண்டும் நல்ல அளவிலான பதக்கம் வழங்கிட ரூ.1500/– கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தினை கடைபிடித்து மாநில அளவில் நடைபெறும் பயிர் விளைச்சல் போட்டிக்கான கடைசி தேதி அந்த நிதியாண்டில் மார்ச் மாதம் 31ஆம் நாள் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாட்டில் நெல் சாகுபடியானது (1) கார்/குறுவை/சொர்ணவாரி; (2) சம்பா/தாளடி/பிசானம்; (3) நவரை/கோடை ஆகிய மூன்று பருவங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் பின் சம்பா பருவத்தில் சாகுபடி

தொடர்ச்சி.......

மேற்கொள்ளப்படும் நெல் பயிரின் அறுவடை ஏப்ரல் மாதம் 15ம் தேதி வரை நடைபெற வாய்ப்பு உள்ளதால், மூன்றாம் பருவத்தில் திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் போட்டியில் பங்குபெறும் விதமாக மாநில அளவில் நடைபெறும் இந்த பயிர் விளைச்சல் போட்டிக்கான கடைசி தேதியினை ஏப்ரல் 15 ஆம் நாள் வரை நீட்டிப்பு செய்து ஆணை வழங்கும்படியும் வேளாண்மை இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, மாநில அளவில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தினை கடைபிடித்து மாநில அளவில் நடைபெறும் பயிர் விளைச்சல் போட்டிக்கான கடைசித் தேதியினை ஏப்ரல் 15ஆம் நாள் வரை நீட்டித்தும், தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளிப் பதக்கம் தயார் செய்திட ஒதுக்கப்பட்டு வரும் நிதி ரூ.3,500/–க்கு பதிலாக, ரூ.5,000/– ஆக உயர்த்தி வழங்கியும் ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.30764/ வேளாண்மை/2018, நாள் 02.07.2018–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ககன்தீப் சிங் பேடி,**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சென்னை–5.
மாநில முதன்மைக் கணக்காயர் (G&SSA), சென்னை – 18.
மாநில முதன்மைக் கணக்காயர் (E&RSA), சென்னை – 18.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை–18/(பெயரில்).
மாநிலக் கணக்காயர், சென்னை–18/(பெயரில்).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
உறைவிட தணிக்கை அலுவலர், மாநில முதன்மை கணக்காயர் அலுவலகம் (சமூகத் தணிக்கைப் பிரிவு), சென்னை–9.

நகல்:–
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை–9.
வேளாண்மை (பொது/வ&தி) துறை, சென்னை–9.
பொதுத் துறை, சென்னை–9.
நிதித் (வேளாண்மை / வரவு செலவு / பொது I & II) துறை, சென்னை–9.
வேளாண்மை (அநமு3) துறை, சென்னை–9. (2 நகல்கள்) (அட்டவணைப்படுத்தும் வகைக்கு).
உதவி நிரளர், வேளாண்மைத் துறை, சென்னை–9.
அரசு ஆணை (நிலை) எண்.246, வேளாண்மை (வேஉ4) துறை, நாள் 21.12.2011.
இருப்பு கோப்பு/ உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

17/9/18
பிரிவு அலுவலர்